# 63/2026-T

| Question Booklet Alpha Code | A | Question Booklet Serial Number: |
|---|---|---|

| Total Number of Questions : 100 | Time : 1 Hour 30 Minutes |
|---|---|
| Maximum Marks : 100 | |

A

## INSTRUCTIONS TO CANDIDATES

1. The question paper will be given in the form of a Question Booklet. There will be four versions of question booklets with question booklet alpha code viz. A, B, C & D.
2. The Question Booklet Alpha Code will be printed on the top left margin of the facing sheet of the question booklet.
3. The Question Booklet Alpha Code allotted to you will be noted in your seating position in the Examination Hall.
4. If you get a question booklet where the alpha code does not match to the allotted alpha code in the seating position, please draw the attention of the Invigilator IMMEDIATELY.
5. The Question Booklet Serial Number is printed on the top right margin of the facing sheet. If your question booklet is unnumbered, please get it replaced by new question booklet with same alpha code.
6. The question booklet will be sealed at the middle of the right margin. Candidate should not open the question booklet until the indication is given to start answering.
7. Immediately after the commencement of the examination, the candidate should check that the question booklet supplied to him/her contains all the 100 questions in serial order. The question booklet does not have unprinted or torn or missing pages and if so, he/she should bring it to the notice of the Invigilator and get it replaced by a complete booklet with same alpha code. This is most important.
8. A blank sheet of paper is attached to the question booklet. This may be used for rough work.
9. **Please read carefully all the instructions on the reverse of the Answer Sheet before marking your answers.**
10. Each question is provided with four choices (A), (B), (C) and (D) having one correct answer. Choose the correct answer and darken the bubble corresponding to the question number using Blue or Black Ball Point Pen in the OMR Answer Sheet.
11. **Each correct answer carries 1 mark and for each wrong answer 1/3$^{rd}$ mark will be deducted. No negative mark for unattended questions.**
12. No candidate will be allowed to leave the examination hall till the end of the session and without handing over his/her Answer Sheet to the Invigilator. Candidates should ensure that the Invigilator has verified all the entries in the Register Number Coding Sheet and that the Invigilator has affixed his/her signature in the space provided.
13. Strict compliance of instructions is essential. Any malpractice or attempt to commit any kind of malpractice in the Examination will result in the disqualification of the candidate.

DO NOT WRITE HERE

1. திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் இலவச மற்றும் கட்டாயக் கல்வி முறையை நடைமுறைப்படுத்தியவர் யார்?

(A) சுவாதித் திருநாள்

(B) கௌரி லட்சுமி பாய்

(C) கௌரி பார்வதி பாய்

(D) உமையம்மா ராணி

2. டல்ஹவுசி பிரபு எந்த மாகாணத்தை "ஒரு நாள் நம் வாயில் வந்து விழப்போகும் செர்ரி பழம்" என்று வர்ணித்தார்?

(A) ஜான்சி

(B) அவத்

(C) கான்பூர்

(D) நேபாளம்

3. 2026 ஆம் ஆண்டில் ஜி-7 உச்சி மாநாடு எந்த நாட்டில் நடைபெறவிருக்கிறது?

(A) இந்தியா

(B) பெல்ஜியம்

(C) இங்கிலாந்து

(D) பிரான்சு

4. நேரடி நடவடிக்கை நாள் போராட்டத்தைத் தொடங்கப்போவதாக அறிவித்தவர் யார்?

(A) காந்திஜி

(B) சுபாஷ் சந்திர போஸ்

(C) முகமது அலி ஜின்னா

(D) சந்திரசேகர் ஆசாத்

5. ''சிவயோக விலாசம்'' என்ற மாதாந்திர இதழைத் தோற்றுவித்தவர் யார்?

(A) வைகுண்ட சுவாமிகள்

(B) ஸ்ரீ நாராயணகுரு

(C) அய்யன்காளி

(D) வாக்படானந்தன்

6. எந்த வரலாற்றுச் சிறப்புமிக்க கூட்டத்தொடரில் காங்கிரஸ் தனது இறுதி இலக்காக "முழுமையான சுயராஜ்யம்" என்பதை அறிவித்தது?

(A) லாகூர்

(B) நாக்பூர்

(C) பம்பாய்

(D) கல்கத்தா

7. கலப்பு அலைகள் தொடர்பாக பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?

(i) கலப்பு அலை என்பது ஒரு நாளைக்கு ஒரு உயர் அலை மற்றும் ஒரு தாழ் அலையைக் கொண்டதாகும்.

(ii) அலைகளின் உயரத்தில் வித்தியாசம் இருக்கும்போது கலப்பு அலை ஏற்படுகிறது.

(iii) கலப்பு அலை என்பது ஒரு நாளைக்கு இரண்டு உயர் அலைகள் மற்றும் இரண்டு தாழ் அலைகளைக் கொண்டதாகும்.

(iv) கலப்பு அலை என்பது ஒரு நாளைக்கு மூன்று உயர் அலைகள் மற்றும் மூன்று தாழ் அலைகளைக் கொண்டதாகும்.

(A) i மற்றும் iii சரியானவை

(B) iii மற்றும் iv மட்டுமே சரியானவை

(C) ii மட்டுமே சரியானது

(D) மேலே உள்ள அனைத்தும் சரியானவை

8. வளிமண்டலத்தில் அதிக பசுமை இல்ல விளைவை ஏற்படுத்தும் வாயு எது?

(A) மீத்தேன்

(B) நைட்ரஸ் ஆக்ஸைடு

(C) கார்பன்-டைஆக்ஸைடு

(D) கார்பன் மோனாக்ஸைடு

9. பின்வரும் மாதங்களில் எவை காரிஃப் (முன்பட்டப் பயிர்) பயிருடன் தொடர்புடையவை?

(A) ஏப்ரல் - ஜூன்

(B) ஜூன் - செப்டம்பர்

(C) அக்டோபர் - மார்ச்

(D) டிசம்பர் - பிப்ரவரி

10. பின்வரும் கூற்றுகளில் எது துல்லியமானது?

(i) இமயமலையிலிருந்து பாயும் ஆறுகளும் ஓடைகளும் பார்வைக்கு மறைந்து போகும் நிகழ்விற்கு பாபர் என்று பெயர்.

(ii) இமயமலையிலிருந்து பாயும் ஆறுகளும் ஓடைகளும் பார்வைக்கு மறைந்து போகும் நிகழ்விற்கு காதர் என்று பெயர்.

(iii) இமயமலையிலிருந்து பாயும் ஆறுகளும் ஓடைகளும் பார்வைக்கு மறைந்து போகும் நிகழ்விற்கு பாங்கர் என்று பெயர்.

(iv) பழைய வண்டல் மண் படிவுகளைக் கொண்டதாய் சமவெளிப் பகுதி பங்கர் என்று அழைக்கப்படுகிறது.

(A) (i) மற்றும் (iii) சரியானவை

(B) (ii) மட்டுமே சரியானது

(C) (i) மற்றும் (iv) சரியானவை

(D) (iii) மட்டுமே சரியானது

11. இந்திய துணைக்கண்ட பீடபூமியின் மிக உயர்ந்த இரண்டாவது சிகரம் எது?
   (A) ஆனைமுடி
   (B) நல்லமலா
   (C) தொட்டபெட்டா
   (D) மகேந்திரகிரி

12. பின்வருவனவற்றில் கேரளாவின் வண்ணத்துப்பூச்சி சரணாலயம் எது?
   (A) ஆரளம்
   (B) பெரியாறு
   (C) அமைதிப் பள்ளத்தாக்கு
   (D) சூளனூர்

13. "வேலைவாய்ப்பு அமைப்பு" என்பதன் உண்மையான பொருள் என்ன?
   (A) நாட்டின் அனைத்து தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை.
   (B) விவசாயத்தில் ஈடுபட்டுள்ள நபர்களின் மொத்த எண்ணிக்கை.
   (C) பல்வேறு வகையான தொழில்களில் மக்கள் தொகை பரவியிருக்கும் விதம்.
   (D) மொத்த தொழிலாளர்களின் எண்ணிக்கைக்கும் மொத்த மக்கள் தொகைக்கும் இடையே உள்ள விகிதம்.

14. எந்த ஐந்தாண்டுத் திட்டம் விவசாயத் துறைக்கு முன்னுரிமை அளித்தது?
   (A) ஒன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்
   (B) இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்
   (C) மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்
   (D) நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்

15. நீதி (NITI)ஆயோக் அமைப்பின் முதல் தலைமைச் செயல் அதிகாரியாக இருந்தவர் யார்?
   (A) சிந்துஸ்ரீ குல்லர்
   (B) பி.வி.ஆர். சுப்பிரமணியன்
   (C) சஞ்சய் மல்ஹோத்ரா
   (D) நிர்மலா சீதாராமன்

16. வறுமைக் கோட்டைத் தீர்மானிக்கும் செயல்பாட்டில், சிறைவாசிகளின் வாழ்க்கைச் செலவுகளை கணக்கிடுவதோடு தொடர்புடையவர் பின்வருபவர்களில் யார்?
   (A) வி.கே.ஆர்.வி. ராவ்
   (B) தாதாபாய் நௌரோஜி
   (C) ஆர்.சி. தேசாய்
   (D) வில்லியம் டிக்பி

17. உள்நாட்டுப் பொருளாதாரத்தை உலகப் பொருளாதாரத்துடன் ஒருங்கிணைப்பது எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(A) சர்வதேசமயமாக்கல்

(B) தனியார்மயமாக்கல்

(C) உலகமயமாக்கல்

(D) தாராளமயமாக்கல்

18. நிதி மற்றும் சொத்துக்கள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதற்காக இந்திய ரிசர்வ் வங்கி (RBI) வெளியிட்ட செயலியின் பெயர் என்ன?

(A) RBIDIGITAL

(B) ECORBI

(C) FINRBI

(D) RBIDATA

19. இந்தியா தொடர்பாக, பின்வரும் கூற்றுகளில் எவை துல்லியமானவை?

(i) இங்கு ஒற்றைக் குடியுரிமை மட்டுமே உள்ளது.

(ii) புதிய பகுதிகளை இணைப்பதன் மூலம் குடியுரிமையைப் பெற முடியும்.

(iii) அரசியலமைப்பின் பகுதி IV குடியுரிமைப் பற்றிப் பேசுகிறது.

மேற்கண்ட கூற்றுகளில் எது சரியானது?

(A) (i) மட்டுமே சரியானது

(B) (i) மற்றும் (iii) சரியானவை

(C) (i) மற்றும் (ii) சரியானவை

(D) மேலே உள்ள அனைத்தும் சரியானவை

20. அரசு கொள்கைகளின் வழிகாட்டு நெறிமுறைகள் தொடர்பாக, பின்வரும் கூற்றுகளில் எவை சரியானவை?

(i) அரசியலமைப்பின் 36 முதல் 51 வரையிலான சட்டப்பிரிவுகள் வரையறுக்கின்றன.

(ii) அரசியலமைப்பின் 30 முதல் 46 வரையிலான சட்டப்பிரிவுகள் வரையறுக்கின்றன.

(iii) அரசியலமைப்பின் 35 முதல் 53 வரையிலான சட்டப்பிரிவுகள் வரையறுக்கின்றன.

(iv) அரசியலமைப்பின் 39 முதல் 51 வரையிலான சட்டப்பிரிவுகள் வரையறுக்கின்றன.

(A) (iii) மற்றும் (iv) சரியானவை

(B) (iii) மட்டுமே சரியானது

(C) (i) மட்டுமே சரியானது

(D) (ii) மற்றும் (iii) சரியானவை

21. பட்டியல் I-இல் உள்ளவற்றை பட்டியல் II-உடன் பொருத்துக:

| பட்டியல் - I (அரசியலமைப்பு பட்டியல்) | பட்டியல் - II (விஷயங்கள்) |
|---|---|
| a. மத்திய பட்டியல் | 1. துறைமுகங்கள் |
| b. மாநில பட்டியல் | 2. உணவுப்பொருட்களில் கலப்படம் |
| c. பொதுப் பட்டியல் | 3. கால்நடை வளர்ப்பு |

(A) a-2, b-3, c-1
(B) a-1, b-3, c-2
(C) a-3, b-2, c-1
(D) a-2, b-1, c-3

22. 44-வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் தொடர்பாக பின்வரும் கூற்றுகளில் எது தவறானது?

(i) அடிப்படை உரிமைகள் பட்டியலிலிருந்து சொத்துரிமையை நீக்குதல்.

(ii) சொத்துரிமையானது சட்டப்பிரிவு 300(B)-இல் சேர்க்கப்பட்டது.

(iii) தடுப்புக் காவலை முறைப்படுத்தும் கூடுதல் நிபந்தனைகளைச் சேர்க்க சட்டப்பிரிவு 22(4) திருத்தப்பட்டது.

(iv) சட்டப்பிரிவு 352-இல் "உள்நாட்டு மோதல்" என்ற வார்த்தைக்குப் பதிலாக "ஆயுதமேந்திய மோதல்" என்று மாற்றப்பட்டது.

(A) (i) மற்றும் (iii)
(B) (ii) மட்டுமே
(C) (ii), (iii), மற்றும் (iv)
(D) (i) மற்றும் (iv)

23. பின்வருவனவற்றில் எது மூன்றடுக்கு பஞ்சாயத்து ராஜ் அமைப்பின் ஒரு பகுதி அல்ல?

(A) கிராம பஞ்சாயத்து
(B) வட்டார பஞ்சாயத்து
(C) மாவட்டக் குழு
(D) மாவட்ட பஞ்சாயத்து

24. அரசியலமைப்பின் எந்தச் சட்டப்பிரிவுகள் கலாச்சாரம் மற்றும் கல்வி தொடர்பான உரிமைகள் பற்றிப் பேசுகின்றன?

(A) சட்டப்பிரிவுகள் 25 முதல் 28 வரை
(B) சட்டப்பிரிவுகள் 29 முதல் 30 வரை
(C) சட்டப்பிரிவுகள் 31 முதல் 32 வரை
(D) சட்டப்பிரிவுகள் 23 முதல் 24 வரை

25. பின்வருவனவற்றில் எது தவறானது?

(A) கிரிப்ஸ் தூதுக்குழுவின் அறிவுறுத்தல்களின்படி அரசியலமைப்பு வரைவுக் குழு உருவாக்கப்பட்டது.

(B) 10,00,000 நபர்களுக்கு ஒருவர் என்ற அடிப்படையில் இடங்கள் தீர்மானிக்கப்பட்டன.

(C) இக்குழுவின் முதல் கூட்டத்தொடர் 1946 டிசம்பர் 09 அன்று நடைபெற்றது.

(D) வரைவுக் குழுவின் நிரந்தரத் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத் ஆவார்.

26. பின்வருவனவற்றில் எவை மத்திய சேவைகள் ஆகும்?

(i) இந்தியக் காவல் பணி

(ii) இந்திய ஆட்சிப் பணி

(iii) இந்திய ரயில்வே பணி

(iv) இந்திய வருவாய்ப் பணி

(A) (ii), (iii), மற்றும் (iv)

(B) (iii) மற்றும் (iv)

(C) (i), (ii), மற்றும் (iii)

(D) (iv) மட்டுமே

27. 1947-க்குப் பிறகு பிறந்த, சுதந்திர இந்தியாவின் தலைமைத் தேர்தல் ஆணையர்களாக இருந்தவர்கள் பின்வருபவர்களில் யார்?

(i) என். கோபாலசுவாமி

(ii) ஞானேஷ் குமார்

(iii) டி. என். சேஷன்

(iv) சுகுமார் சென்

(A) (i) மற்றும் (iv)

(B) (ii) மட்டுமே

(C) (iii) மட்டுமே

(D) மேலே உள்ள அனைவரும்

28. கேரள மாநில மகளிர் ஆணையம் தொடர்பாக பின்வரும் கூற்றுகளில் எவை சரியானவை?

(i) கேரள மாநில மகளிர் ஆணையம் 1990 ஆம் ஆண்டு தேசிய மகளிர் ஆணையச் (NCW) சட்டத்தின் பிரிவு 5-ன் கீழ் நிறுவப்பட்டது.

(ii) கேரள மாநில மகளிர் ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும்.

(iii) கேரள மாநில மகளிர் ஆணையக் கூட்டத்தின் குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை நான்கு ஆகும்.

(iv) 'ஸ்திரீ சக்தி' என்பது கேரள மாநில மகளிர் ஆணையத்தின் வெளியீட்டின் பெயர் ஆகும்.

(A) (i) மட்டுமே

(B) (ii) மற்றும் (iii)

(C) (i), (ii), மற்றும் (iii)

(D) மேலே உள்ள அனைத்தும்

29. கேரள மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் தொடர்பாக பின்வரும் கூற்றுகளில் எவை சரியானவை?

(i) கேரள மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் 2005 இல் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் கீழ் உருவாக்கப்பட்டது.

(ii) கேரள மாநில அரசின் தலைமைச் செயலாளர், கேரள மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் துணைத் தலைவராக உள்ளார்.

(iii) "சேஃப் கேரளம்" என்பது கேரள மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் முழக்கமாகும்.

(A) (i) மற்றும் (ii)

(B) (i) மற்றும் (iii)

(C) (ii) மற்றும் (iii)

(D) (i) மட்டுமே

30. கேரள நெல் வயல் மற்றும் ஈரநிலப் பாதுகாப்புச் சட்டம், 2008 தொடர்பாக பின்வரும் கூற்றுகளில் எவை சரியானவை?

(i) கேரள நெல் வயல் மற்றும் ஈரநிலப் பாதுகாப்புச் சட்டம், 2008-ன் பிரிவு 11, ஈரநிலங்களை மாற்றுவதைத் தடை செய்கிறது.

(ii) கேரள நெல் வயல் மற்றும் ஈரநிலப் பாதுகாப்புச் சட்டம், 2008-ன் பிரிவு 08, உள்ளூர் அளவிலான கண்காணிப்புக் குழுக்களை (LLMCs) அமைப்பதற்கான வழிமுறைகளை விளக்குகிறது.

(iii) மாநில ஈரநில ஆணையம் கேரள நெல் வயல் மற்றும் ஈரநிலப் பாதுகாப்புச் சட்டம் (SWAK), 2008-ன் கீழ் உருவாக்கப்பட்டது.

(A) (ii) மட்டுமே
(B) (i) மட்டுமே

(C) (ii) மற்றும் (iii)
(D) (iii) மட்டுமே

31. கேரள மாநில அரசின் திட்டவரைவுகள் மற்றும் உத்திகளோடு தொடர்புடைய பின்வருவனவற்றில் எவை தவறானவை?

(i) 'கே-ஸ்மார்ட்' (K-smart) என்பது மாநில நலத்திட்டங்கள் மற்றும் சேவைகளை மக்களின் வீட்டு வாசலிலேயே வழங்குவதற்காக சமூக நீதி அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட ஓர் இணையதளமாகும்.

(ii) 'சினேகயானம்' என்பது வனங்கள் அமைச்சகத்தால் பழங்குடியின சமூகங்களுக்கு நேரடியாகச் சுகாதாரச் சேவைகளை வழங்குவதற்காகத் தொடங்கப்பட்டது.

(iii) 'மந்தஹாசம்' என்பது சமூக நீதி அமைச்சகத்தால் முதியவர்களுக்குச் செயற்கை பற்கள் வழங்குவதற்காகத் தொடங்கப்பட்டது.

(A) (ii) மற்றும் (iii)

(B) (iii) மட்டுமே

(C) (i) மற்றும் (ii)

(D) (ii) மட்டுமே

32. மனித உடல் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எவை சரியானவை?

(i) தசைநார்கள் தசைகளை எலும்புகளுடன் இணைக்கின்றன.

(ii) மெலனின் என்பது தோலுக்கு நிறமளிக்கும் ஒரு பொருளாகும்.

(iii) கண்களில், ஆரத் தசைகளே லென்ஸ்களை அவற்றின் இடங்களில் நிலைநிறுத்துகின்றன.

(iv) வேகஸ் நரம்பு என்பது சூட்சும நாடிக்கு ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.

(A) (i) மற்றும் (iii)

(B) (iv) மட்டுமே

(C) (ii) மட்டுமே

(D) (ii) மற்றும் (iii)

33. எது சரியான பொருத்தம்?

| | | |
|---|---|---|
| a. தொழுநோய் | - | (i) புழுக்கள் |
| b. சேற்றுப்புண் | - | (ii) வைரஸ் |
| c. தட்டம்மை | - | (iii) பூஞ்சை |
| d. யானைக்கால் நோய் | - | (iv) பாக்டீரியா |

(A) a-(ii), b-(iv), c-(i), d-(iii)

(B) a-(iv), b-(iii), c-(ii), d-(i)

(C) a-(i), b-(iii), c-(iv), d-(ii)

(D) a-(i), b-(ii), c-(iii), d-(iv)

34. உடலில் கால்சியம் அளவு குறைவதால் பின்வருவனவற்றில் எது நிகழ்கிறது?

(i) எலும்புகள் மற்றும் பற்களின் ஆரோக்கியத்தைப் பாதித்தல்.

(ii) வழக்கமான இதயத் துடிப்பு வீதத்தை சீர்குலைத்தல்.

(iii) தசைகளின் செயல்பாட்டைப் பாதித்தல்.

(iv) இரத்தம் உறைதலைப் பாதித்தல்.

(A) (i) மட்டுமே

(B) (ii) மற்றும் (iii)

(C) (i), (ii), மற்றும் (iii)

(D) மேலே உள்ள அனைத்தும்

35. இரத்தத்தில் மிகக் குறைந்த அளவில் காணப்படும் வெள்ளை இரத்த அணு எது?

(A) நியூட்ரோபில்

(B) ஈசினோபில்

(C) பேசோபில்

(D) லிம்போசைட்

36. பின்வருவனவற்றில் எது பல்லுயிர்ப் பெருக்க அழிவை ஏற்படுத்தும் காரணி அல்ல?

(i) கூட்டு அழிவு

(ii) அந்நிய உயிரினங்களின் படையெடுப்பு

(iii) அதிகப்படியான சுரண்டல்

(iv) இயற்கைத் தேர்வு

(A) (i) மற்றும் (ii)

(B) (ii) மற்றும் (iii)

(C) (iii) மற்றும் (iv)

(D) (iv) மட்டுமே

37. படுத்த படுக்கையாக இருக்கும் நோயாளிகளுக்கான கேரள அரசின் சிறப்புத் திட்டம் எது?

(A) ஆஷ்வாச கிரணம்

(B) அபய கிரணம்

(C) சினேக ஸ்பர்சம்

(D) ஆரோக்ய கிரணம்

38. 5 செ.மீ குவியத் தொலைவு கொண்ட ஒரு எளிய நுண்ணோக்கியின் (Simple Microscope) கோணப் பெருக்கம் (Angular Magnification) என்ன?

(A) 5
(B) 6
(C) 10
(D) 25

39. மைக்ரோவேவ் அடுப்பில் உணவு சூடாவதற்கு முக்கிய காரணி எது?

(A) உணவில் உள்ள எலக்ட்ரான்களைத் தூண்டுவது
(B) நீர் மூலக்கூறுகளின் அதிர்வு
(C) ஒளியின் பிரதிபலிப்பு
(D) வெப்பக் கடத்துத்திறன்

40. பின்வருவனவற்றில் எது மிக வலிமையான உராய்வு விசை?

(A) பரப்பின் விரிவாக்கம்
(B) மேற்பரப்பின் தன்மை
(C) பொருளின் வடிவம்
(D) பொருளின் வேகம்

41. 2025 ஆம் ஆண்டில் கண்டறியப்பட்ட ஈர்ப்பு அலைகள் (Gravitational Waves) எந்த நிகழ்வின் ஒரு பகுதியாகும்?

(A) சூரியப்புள்ளிகளின் வெளிப்பாடு
(B) நியூட்ரான் விண்மீன் வெடிப்பு
(C) கருந்துளைகளிலிருந்து வெளிப்படும் உமிழ்வுகள்
(D) வால் நட்சத்திரங்களின் இயக்கம்

42. பின்வரும் தனிமங்களில் எது புறவேற்றுமை வடிவத்துவ பண்பைக் காட்டுவதில்லை?

(A) கார்பன்
(B) சல்பர்
(C) பாஸ்பரஸ்
(D) நைட்ரஜன்

43. பின்வருவனவற்றில் எவை மும்மூலக் அமிலங்கள் அல்ல?

(i) ஆக்சாலிக் அமிலம்
(ii) சல்பூரிக் அமிலம்
(iii) பாஸ்பாரிக் அமிலம்
(iv) கார்போனிக் அமிலம்

(A) (i), (ii), (iv)
(B) (i), (iii), (iv)
(C) (i), (ii), (iii)
(D) (ii), (iii), (iv)

44. லித்தியம், தனிம வரிசை அட்டவணையின் முதல் தொகுதியைச் சார்ந்தது. இது தொடர்பாக பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?

(i) லித்தியம், மெக்னீசியத்துடன் மூலைவிட்டத் தொடர்பைக் காட்டுகிறது.

(ii) லித்தியம் அணைவுச் சேர்ம வினைகளைக் காட்டுகிறது.

(iii) லித்தியம் அதிக அயனியாக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது.

(iv) லித்தியம் அதிக எலக்ட்ரான் கவர் ஆற்றலைக் (Electronegativity) கொண்டுள்ளது.

(A) (i), (ii), (iii)

(B) (i), (ii), (iv)

(C) (i), (iii), (iv)

(D) (ii), (iii), (iv)

45. 2025 ஆம் ஆண்டிற்கான வேதியியலுக்கான நோபல் பரிசு "மூலக்கூறு கட்டமைப்பு" என்பதற்காக வழங்கப்பட்டது. இக்கூற்றுடன் தொடர்புடையதாக, பின்வருவனவற்றில் எது தவறானது?

(A) இது வளிமண்டலத்திலிருந்து ஈரப்பதத்தை ஈர்த்து தண்ணீராகப் பயன்படுத்துவதை சாத்தியமாக்குகிறது.

(B) இது நச்சு வாயுக்களைப் பாதுகாப்பாகச் சேமிப்பதை சாத்தியமாக்குகிறது.

(C) இது பிளாஸ்டிக் கழிவு மேலாண்மையைச் சிறப்பாகக் கையாள்வதை சாத்தியமாக்குகிறது.

(D) அணு ஆயுதங்களால் வெளியாகும் நச்சுப் பொருட்களைப் பாதுகாப்பாக கையாள்வதை சாத்தியமாக்குகிறது.

46. மாமாங்கம் திருவிழா தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எவை சரியானவை?

(i) மாமாங்கம் கொண்டாட்டங்கள் கேரள அரசியலில் பிராமண சமூகங்களின் செல்வாக்கைக் காட்டுகின்றன.

(ii) மாமாங்கம் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை கொண்டாடப்படுகிறது.

(iii) குலசேகர வம்சத்தின் முடிவில், மாமாங்கம் கொண்டாடும் பாரம்பரியத்தை வள்ளுவநாட்டு வள்ளாட்டிரிகள் ஏற்றுக் கொண்டனர்.

(iv) பாரதப்புழா ஆற்றங்கரையில் உள்ள திருநாவாயில் மாமாங்கம் கொண்டாடப்பட்டது.

(A) (i) மற்றும் (iv)

(B) (i), (ii), மற்றும் (iii)

(C) மேலே உள்ள அனைத்தும்

(D) (ii), (iii), மற்றும் (iv)

47. ஆர். ராஜஸ்ரீயின் 'ஆத்ரேயகம்' நாவலில் உள்ள எந்தக் கதாபாத்திரம், மகாபாரதத்தின் சிகண்டியின் வாழ்க்கையோடு வலுவான ஒற்றுமையைக் கொண்டுள்ளது?

(A) விபுலன்

(B) இராவன்

(C) நிரமித்திரன்

(D) திருஷ்டன்

48. ‘யக்ஷகானம்’ நாட்டுப்புறக் கலை தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எவை தொடர்பு இல்லாதவை?

(i) யக்ஷகானத்தில் பயலாட்டம் என்ற ஒரு நிகழ்ச்சி உள்ளது.

(ii) இது ஒரு அனுஷ்டான கலாரூபம்.

(iii) இக்கலை வடிவம் காசர்கோடு மாவட்டத்தில் பரவலாகக் காணப்படுகிறது.

(iv) பார்த்தி சுப்பையா இக்கலையின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்.

(A) (i) மற்றும் (ii)

(B) (ii) மட்டுமே

(C) (i), (iii) மற்றும் (iv)

(D) (iv) மட்டுமே

49. தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் புதிய பெயர் என்ன?

(A) தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்

(B) பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்

(C) விகசித் பாரத் கியாரண்டி ஃபார் ரோஜ்கர் அண்ட் அஜீவிகா மிஷன் - கிராமீன்

(D) சம்பூர்ண கிராமீன் ரோஜ்கர் யோஜனா

50. கீலேரி குஞ்ஞிகண்ணன் 1901 ஆம் ஆண்டில் இந்தியாவின் முதல் சர்க்கஸ் பள்ளியை எங்கு நிறுவினார்?

(A) பெல்லாரி

(B) கண்ணூர்

(C) தலச்சேரி

(D) அடையார்

51. ஒரு பலகோணத்தின் உட்கோணங்களின் கூடுதல் 2700 டிகிரி ஆகும். அது எத்தனை பக்கங்களைக் கொண்டுள்ளது?

(A) 15 (B) 16

(C) 17 (D) 18

52. ஒரு பள்ளியில் 2401 மாணவர்கள் உள்ளனர். வரிசைகளின் எண்ணிக்கையும் நிரல்களின் எண்ணிக்கையும் சமமாக இருக்கும் வகையில் மாணவர்கள் நிற்க வைக்கப்பட்டால், அங்கு எத்தனை வரிசைகள் இருக்கும்?

(A) 47 (B) 41

(C) 45 (D) 49

53. அடுத்தடுத்துள்ள மூன்று சாலைச் சந்திப்புகளில், போக்குவரத்து சமிக்ஞை விளக்குகள் முறையே 48, 60 மற்றும் 72 வினாடிகளுக்கு ஒருமுறை சீராக மாறுகின்றன. அவை அனைத்தும் காலை 7.00 மணிக்கு ஒரே நேரத்தில் மாறினால், மீண்டும் எந்த நேரத்தில் அனைத்தும் ஒன்றாக மாறும்?

(A) காலை 07.30 மணி

(B) காலை 07.24 மணி

(C) காலை 07.12 மணி

(D) மேற்கண்ட எதுவுமில்லை

54. ஒரு பூந்தொட்டியின் விலை 120 ரூபாய் ஆகும். கடைக்காரர் அதனை 10 சதவீத நஷ்டத்தில் விற்றால், அதன் விற்பனை விலை என்னவாக இருக்கும்?

(A) 141 ரூபாய்

(B) 95 ரூபாய்

(C) 108 ரூபாய்

(D) 216 ரூபாய்

55. ஒரு கூட்டுத்தொடர் வரிசையின் முதல் மற்றும் கடைசி உறுப்புகள் 146 ஆகும். அந்தக் கூட்டுத்தொடரின் அனைத்து உறுப்புகளின் கூடுதல் 7171 எனில், அத்தொடரில் எத்தனை உறுப்புகள் உள்ளன?

(A) 101 (B) 103

(C) 105 (D) 107

56. ஒரு குறியீட்டு மொழியில், GO = 32, SHE = 49 எனில், SOME என்பதன் குறியீடு என்னவாக இருக்கும்?

(A) 56

(B) 58

(C) 62

(D) மேற்கண்ட எதுவுமில்லை

57. B-ன் மகன் A. C-ன் மனைவி A. C-ன் மகள் E. எனில், B-க்கு E என்ன உறவு?

(A) பேரன்

(B) பேத்தி

(C) மகன்

(D) மகள்

58. இந்தத் தொடரின் அடுத்த எண் என்னவாக இருக்கும்?

10, 18, 45, 109, ___

(A) 218

(B) 234

(C) 327

(D) மேற்கண்ட எதுவுமில்லை

59. ஒரு குழந்தை 2016 ஜூலை 29, வெள்ளிக்கிழமை அன்று பிறந்திருந்தால், அக்குழந்தையின் 4-வது பிறந்தநாள் எந்தக் கிழமையில் வரும்?

(A) வெள்ளிக்கிழமை

(B) ஞாயிற்றுக்கிழமை

(C) புதன்கிழமை

(D) திங்கட்கிழமை

60. x என்பது + எனவும், ÷ என்பது - எனவும், - என்பது x எனவும், + என்பது ÷ எனவும் கொண்டால், 13x5-20+10÷9 என்பதன் மதிப்பு என்ன?

(A) 26

(B) 14

(C) 37

(D) 55

**61. If I saw a snake under my sofa, I _____ away.**

**(A) Would ran**

**(B) Would run**

**(C) Would have ran**

**(D) Would have been run**

**62. One of the following words is misspelt. Identify the word.**

**(A) valetudinarian**

**(B) acquaintance**

**(C) occurance**

**(D) bureaucracy**

**63. "Ulysses was braver than any other Greek hero" can be written without a change in meaning as**

**(A) No other Greek hero was as brave as Ulysses**

**(B) Very few Greek heroes were brave like Ulysses**

**(C) Ulysses was not the bravest of all other Greek heroes**

**(D) Some other Greek heroes were braver than Ulysses**

64. The foreign expression "carte blanche" means

(A) Complete freedom
(B) Bad intention
(C) High goals
(D) Real purpose

65. Antonym of Gregarious

(A) reserved
(B) surrender
(C) celebrate
(D) ancient

66. Change the following sentence into indirect speech.

The man said to the people at the bus stop "Don't you believe me?"

(A) The man asked the people at the bus stop whether they did not believe him

(B) The man asked the people at the bus stop that you did not believe him

(C) The man said to the people at the bus stop that they dont believe him

(D) The man asked the people at the bus stop if they do not believe him

67. Add an appropriate tag.

Let's have a break now, ______?

(A) Have us?
(B) Shall we?
(C) Shall not we?
(D) Haven't we?

68. Rewrite the following sentence into passive voice.

Make one more attempt.

(A) One more attempt must made by me
(B) Let one more attempt being made
(C) One more attempt being made by me
(D) Let one more attempt be made

69. The head office has ______ his request for transfer.

(A) turned down
(B) set off
(C) put on
(D) get about

70. The meaning of the idiom 'cut corners' is

(A) Reveal a secret
(B) To do something in the easiest way
(C) Miss an opportunity
(D) Take on a risk

71. Garden என்ற சொல்லின் பொருள் என்ன?

(A) மலர்கள் (B) தோட்டம்

(C) காடு (D) மரங்கள்

72. சரியான வாக்கிய அமைப்பு எது?

(A) ஆடிப்பட்டம் தேடி விதை

(B) தேடி விதை ஆடிப்பட்டம்

(C) ஆடிப்பட்டம் விதை தேடி

(D) விதை ஆடிப்பட்டம் தேடி

73. வாய்மை என்ற சொல்லின் எதிர்ச்சொல் எது?

(A) தூய்மை

(B) ஒற்றுமை

(C) உண்மை

(D) பொய்மை

74. பொன் + தாமரை இணைத்து எழுதும் போது எவ்வாறு புணரும்?

(A) பொன்தாமரை

(B) பொர்தாமரை

(C) பொற்றாமரை

(D) பொல்தாமரை

75. மகவு, சேய், குழவி என்னும் சொற்கள் தரும் ஒரு பொருள் எது?

(A) தாய் (B) குழந்தை

(C) மகன் (D) மகள்

76. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் சரியான சொல் எது?

(A) கடற்கரை (B) கடற்கறை

(C) கடல் கறை (D) கடல் கரை

77. அழகு என்ற பொருள் தராத சொல் எது?

(A) நிதி (B) கவின்

(C) எழில் (D) ஒயில்

78. பலர்பால் அல்லாத சொல் எது?

(A) மக்கள் (B) சிறுமிகள்

(C) அரசன் (D) பெண்கள்

79. மேலூர் என்ற சொல்லை பிரித்து எழுதும் போது எப்படி பிரியும்?

(A) மே + ஊர்

(B) மேல் + ஊர்

(C) மே + லூர்

(D) மேற்கு + ஊர்

80. சூரியன் என்ற பொருள் தரும் சொல் எது?

(A) திங்கள்

(B) பரிதி

(C) மதி

(D) அம்புலி

81. ஒரு திண்மப் பொருள் வெப்பப்படுத்தப்படும்போது, அது திரவமாக மாறாமல் நேரடியாக வாயு நிலைக்கு மாறினால், அது __________ எனப்படும்.

(A) பதங்கமாதல்

(B) மையவிலக்கல்

(C) வெப்பக்கடத்தல்

(D) காய்ச்சி வடித்தல்

82. நீரின் கொதிநிலை _____ ஆகும்.

(A) 0°C

(B) 101.4°C

(C) 100°C

(D) 10°C

83. குளோரினின் அணு எண் என்ன?

(A) 17

(B) 16

(C) 15

(D) 11

84. தாவர வளர்ச்சிக்கு அவசியமான நைட்ரஜன், உரங்கள் தயாரிப்பதற்கான ஒரு முக்கிய இரசாயன மூலப்பொருள் எது?

(A) குளோரின்

(B) அம்மோனியா

(C) புரோப்பேன்

(D) பியூட்டேன்

85. எல்.பி.ஜி-ன் யு.என். எண் (UN Number) என்ன?

(A) 1076
(B) 1094
(C) 1086
(D) 1075

86. வெப்பத்தின் அடிப்படை அலகு எது?

(A) கெல்வின்
(B) மோல்
(C) கேண்டிலா
(D) ஆம்பியர்

87. இயந்திர நுரை வகை தீயணைப்பான்கள் எந்த வகையான தீயை அணைக்கப் பயன்படுகின்றன?

(A) எ-வகை தீ
(B) பி-வகை தீ
(C) சி-வகை தீ
(D) டி-வகை தீ

88. வெப்பச்சலனம் எந்த நிலையில் ஏற்படுகிறது?

(A) திண்மம்
(B) திரவம்
(C) வாயு
(D) பிளாஸ்மா

89. PASS என்பதன் விரிவாக்கம் என்ன?

(A) புல், ஏய்ம், ஸ்க்வீஸ், ஸ்வீப்
(B) புஷ், ஏய்ம், ஸ்க்வீஸ், ஸ்வீப்
(C) புல், அலர்ட், ஸ்க்வீஸ், ஸ்வீப்
(D) புஷ், அலர்ட், ஸ்க்வீஸ், ஸ்வீப்

90. முதலுதவியைக் கண்டறிந்தவர் யார்?

(A) ஹென்றி டியூனன்ட்
(B) ராபர்ட் வுட் ஜான்சன்
(C) ஃபிரடெரிக் ஈஸ்மார்க்
(D) ராபர்ட் ஹூக்

91. சிராய்ப்புடன் கூடிய காயங்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

(A) சிதைந்த வெட்டுக் காயங்கள்
(B) நசுங்கிய வெட்டுக் காயங்கள்
(C) நேர்த்தியான வெட்டுக் காயங்கள்
(D) ஊடுருவிய வெட்டுக் காயங்கள்

92. வெட்டப்பட்ட தமனியிலிருந்து இரத்தம் வெளியேறுவதன் அறிகுறிகள் யாவை?

(A) தொடர்ச்சியான இரத்தப்போக்கு

(B) இரத்தம் பீய்ச்சியடித்து வேகமாக வெளியேறுதல்

(C) இரத்தம் நிதானமாக வழிதல்

(D) இரத்தம் இடைவெளி விட்டு வழிதல்

93. உடைந்த எலும்புகள் உள் உறுப்புகளைக் குத்திக் கிழித்தால் அந்த எலும்பு முறிவு எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(A) எளிய எலும்பு முறிவு

(B) பச்சைக்கொம்பு எலும்பு முறிவு

(C) சிக்கலான எலும்பு முறிவு

(D) மூடிய எலும்பு முறிவு

94. பாம்பு கடித்தால் பின்வருவனவற்றில் எதைச் செய்யக்கூடாது?

(A) கடியுண்ட நபருக்கு நம்பிக்கையூட்டி தைரியப்படுத்துதல்.

(B) அந்த நபரை நடக்க அல்லது ஓட வைப்பது.

(C) கடித்த இடத்திற்கு அருகில் இறுக்கமாகக் கட்டுப் போடுவது.

(D) கடியுண்ட பகுதியை இதய மட்டத்திற்கு மேல் உயர்த்தி வைப்பது.

95. இதயத் துடிப்பைக் கண்காணித்து சீராக்கவும், தேவைப்பட்டால் மின் அதிர்ச்சி அளிக்கவும் பயன்படும் சாதனத்தின் பெயர் என்ன?

(A) A.E.D

(B) E.C.G

(C) M.R.I

(D) U.S.G

96. ஒரு பெரியவருக்கு சி.பி.ஆர் கொடுக்கும்போது, நெஞ்சுப் பகுதி அழுத்தத்திற்கும் செயற்கை சுவாசத்திற்கும் இடையிலான விகிதம் என்ன?

(A) 15:1

(B) 30:1

(C) 15:2

(D) 30:2

97. தீக்காயங்களின்போது, கொப்புளங்கள் ஏற்பட்டால் அந்தத் தீக்காயம் எந்த வகையைச் சார்ந்தது?

(A) முதல் நிலை தீக்காயம்

(B) இரண்டாம் நிலை தீக்காயம்

(C) மூன்றாம் நிலை தீக்காயம்

(D) நான்காம் நிலை தீக்காயம்

98. தொண்டையில் உணவு சிக்கும்போது, மூச்சுத் திணறல் ஏற்பட்டு சுவாசம் தடைபடுவது எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(A) ஈசோஃபேஜியா

(B) மூச்சடைப்பு

(C) நீரில் மூழ்குதல்

(D) அஸ்பீலியா

99. தகவல் தொழில்நுட்பச் சட்டம் 2000-ன் பிரிவு 66-ன்படி, இந்தச் சட்டத்தின் பிரிவு 43-ல் பட்டியலிடப்பட்டுள்ள செயல்களை ஒரு நபர் ஏமாற்றும் அல்லது மோசடி செய்யும் நோக்கத்துடன் செய்தால், அவருக்குக் கிடைக்கும் தண்டனை என்ன?

(A) அதிகபட்ச ஓராண்டு சிறைத்தண்டனை அல்லது 1 லட்ச ரூபாய் அபராதம் அல்லது இரண்டும்.

(B) அதிகபட்ச மூன்றாண்டு சிறைத்தண்டனை அல்லது 5 லட்ச ரூபாய் அபராதம் அல்லது இரண்டும்.

(C) அதிகபட்ச ஐந்தாண்டு சிறைத்தண்டனை அல்லது 10 லட்ச ரூபாய் அபராதம் அல்லது இரண்டும்.

(D) அதிகபட்ச ஏழாண்டு சிறைத்தண்டனை அல்லது 10 லட்ச ரூபாய் அபராதம் அல்லது இரண்டும்.

100. தகவல் தொழில்நுட்பச் சட்டம் 2000-ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, ஒரு நபர் மின்னணு கையொப்பம், பதிவேடு, விவரங்கள் அல்லது ஆவணங்களை அணுகி, அந்த ஆவணத்தின் உரிமையாளரின் அனுமதியின்றி அதனை வேறொரு நபருடன் பகிர்ந்தால், அவருக்கு வழங்கப்படும் தண்டனை என்ன?

(A) அதிகபட்ச மூன்றாண்டு சிறைத்தண்டனை

(B) அதிகபட்ச 5 லட்ச ரூபாய் அபராதம்

(C) அதிகபட்ச ஓராண்டு சிறைத்தண்டனை மற்றும் 1 லட்ச ரூபாய் அபராதம்

(D) அதிகபட்ச இழப்பீடாக 10 லட்ச ரூபாய்

---

SPACE FOR ROUGH WORK

A

SPACE FOR ROUGH WORK